2. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு / ஆட்சி மன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு* (Syndicate) *மற்றும் ஆட்சிமன்றப் பேரவை* (Senate) *ஆகியவற்றில் உறுப்பினர்களாகப் பணிபுரிய அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:*

அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு (Syndicate)	- *திரு. எம். ரெங்கசாமி*
சென்னை பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை (Senate)	- *திரு அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி* *திரு. ஞா. செந்தமிழன்* *திரு. ஜே.சி.டி. பிரபாகர்* *திரு. ப. பார்த்தசாரதி* *முனைவர் கோவி. செழியன்* *திரு. அ. சவுந்தரராசன்*
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை (Senate)	- *திரு. ஆர்.பி. உதயகுமார்* *திரு.கே.எஸ்.என். வேணுகோபாலு* *திரு. ஏ.கே.டி. ராஜா* *திரு. அர. சக்கரபாணி*

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 7-2-2016 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.